தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
ஆணை எண். 103/பேரூ/2021

நாள் 23.12.2021

திரு. சு கண்ணன்,
மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 30A எடுப்பல் கக்கன் தெரு, என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு கண்ணன் என்பவரின் 01.09.2021 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 06.9.2021ல் பெறப்பட்டு, 103/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி, 30A எடுப்பல் கக்கன் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. கண்ணன் என்பவரின் 01.09.2021 நாளிட்ட புகார் மனுவில் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி பொது நிதியில் 2020–2021, 2021–2022 ஆண்டுக்கான தெரு விளக்கு உதிரிப்பொருட்கள் சப்ளை/கொள்முதல் செய்ய ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பொருட்கள் கொள்முதல் செய்ததில், கீழ்க்கண்ட முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என குறிப்பிட்டுள்ளார்:-

1. நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, மன்ற தீர்மானம் பெறப்படாமல் டெண்டர் விடப்பட்டுள்ளது:

ரூபாய் 20 இலட்சம் வரை நிர்வாக அனுமதி வழங்கிட பேரூராட்சி உதவி இயக்குநருக்கும், தொழில்நுட்ப அனுமதி வழங்கிட உதவி செயற் பொறியாளருக்கும்,

தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பு அரசாணை எண்.166 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.4.2008ல் வழங்கப்பட்டுள்ளது. 2020–2021, 2021–2022 ஆண்டுக்கான டெண்டர் விளம்புகையில் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் பணியில் இருந்த செயல் அலுவலர், பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்களிடம் 15 லட்சம் மதிப்பு தெருவிளக்கு உதிரிப்பொருட்களை ஆண்டு முழுவதும் சப்ளை/கொள்முதல் செய்ய, நிர்வாக அனுமதி பெறவில்லை. உதவி செயற் பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதியும் பெறவில்லை. பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் பெறப்படவில்லை. மேற்கண்ட எந்த ஒப்பந்த விதிமுறைகளையும் பின்பற்றாமல், செயல் அலுவலர் அவர்கள் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளார்.

2. <u>டெண்டர் விதிமுறைகளை பின்பற்றாமல் விளம்பரம் செய்யாமல் டெண்டர் விடப்பட்டுள்ளது</u>:

ரூபாய் 10,00,000/–க்கு மேல் பொருட்கள் கொள்முதல் செய்யும் நிகழ்வில் மாவட்ட ஒப்பந்த மலர், மாவட்ட செய்தித்தாள், (E.Tender) வலைதளத்தில் விளம்பரம் செய்யவேண்டும். மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் தெருவிளக்கு உதிரி பொருட்கள் கொள்முதல் செய்ய, பொது நிதியில் ரூபாய் பதினைந்து லட்சத்திற்கு பிப்ரவரி மாதம் 2020–இல் பேரூராட்சி தகவல் பலகையில் மட்டும் டெண்டர் விளம்புகை செய்யப்பட்டது. 2021–இல் விளம்பரப்படுத்தாமல் டெண்டர் விடப்பட்டுள்ளது.

3. <u>டெண்டர் விதிமுறைகளை பின்பற்றாமல் ஒரே குடும்ப உறுப்பினரை கலந்துகொள்ளசெய்து, அதிக விலைக்கு பொருட்கள் கொள்முதல் செய்ய டெண்டர் விடப்பட்டுள்ளது</u>:-

டெண்டர் விளம்புகை தெரிவதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில், பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டு, திருநெல்வேலி டவுனைச் சேர்ந்த ஷா. ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் நிறுவன தலைவர் திரு. ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் என்பவரும், மாலானி லைட்டிங் நிறுவனர் திருமதி. Sardarmalji Jayanthilal Vimala Devi ஆகிய இரு நிறுவனங்களும் மட்டும் கலந்துகொண்டது. டெண்டரில் கலந்துகொண்ட இரு நிறுவனங்களும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இரு நிறுவனங்களும் தொடர்புகொள்ள ஒரே மொபைல் எண்.9786655544 வைத்துள்ளனர். விதிகளுக்கு முரணாக கையூட்டு பெற்றுக்கொண்டு, ஒரே குடும்பத்தைச் சார்ந்த நபருக்கு தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி விற்பனை ஆவணம் பெற ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின், மாலானி லைட்டிங் ஆகிய இரு நிறுவனமும் 24.2.2020 அன்று செலுத்துச் சீட்டு எண் முறையே 994, 995 மூலம் ஒப்பந்தப்புள்ளி விற்பனை நமூனா ரூபாய் 680 வீதம் செலுத்தி பெற்றுள்ளனர். மேற்கண்ட இரு நிறுவனங்களாலும் ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகையை 25.2.2020 அன்று செலுத்துச்சீட்டு எண் முறையே 1023, 1024 மூலம் 15,000/– ரூபாய் வீதம் செலுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி மதிப்பு 10.00 இலட்சத்திலிருந்து 20.00 இலட்சம் வரை உள்ள நிகழ்வில் ஒப்பந்தப்புள்ளி விற்பனை (sale price of tender document) ரூபாய் 6,000 + ST @ 4% + SC. பேரூராட்சி செயல் அலுவலர் அவர்கள் குறைவான

தொகையே, ரூபாய் 680 மட்டும் பெற்று, பேரூராட்சிக்கு நிதி இழப்புக்கு காரணமாக உள்ளார்.

4. ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்படவில்லை, GST வருமான வரி பிடித்தம் செய்யப்பட வில்லை, அரசுக்கு நிதி இழப்பு:

ஷா ஜெகன்லால் ஜெயின் நிறுவனம் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்யப்படவில்லை. 2,50,000 மதிப்புக்குமேல் வேலை கொள்முதல் நிகழ்வில், 2% GST பிடித்தம் செய்யவேண்டும். GST பிடித்தம் செய்யப்படவில்லை. வருமானவரி 1% பிடித்தம் செய்யப்படவில்லை.

5. ஒப்பந்த மதிப்பீட்டைவிட அதிக மதிப்பிற்கு பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது:

ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே ஒப்பந்த புள்ளிகளில் கலந்துகொண்டதால் பொருட்கள் கொள்முதலில் சந்தை மதிப்பைவிட அதிக விலைக்கு பொருட்கள் பெறப்பட்டுள்ளன. 15.00 இலட்சத்திற்கு டெண்டர் விடுப்பட்டு, சுமார் 50 இலட்சத்திற்கும் மேல்வரை பொருட்கள் பெறப்பட்டதாக பட்டியல் பெறப்பட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஒப்பந்த மதிப்பைவிட, அதிக தொகைக்கு பொருட்களை சப்ளை செய்ய சப்ளைதாரருக்கு வாய்ப்பு வழங்கி பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையை சிறிது சிறிதாக வழங்கி GST பிடித்தம் செய்யாமல் அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. பொருட்கள் பெறாமல் பெறப்பட்டதாக பில் மட்டும் பெற்றுக்கொண்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது:

ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களை டெண்டரில் கலந்துகொள்ளச் செய்து பொருட்களை வாங்காமல், பில்களை மட்டும் பெற்றுக்கொண்டு, காசோலை வழங்கி, லஞ்சம் பெற்றுக்கொண்டு மோசடி செய்துள்ளனர். மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் தெரு விளக்கு பராமரிப்புக்காக தெருவிளக்கு இருப்புப் பதிவேடு, மின்கம்பங்களின் பதிவேடு, தெருவிளக்கு பராமரிப்புப் பதிவேடு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒப்பந்ததாரரிடம் பட்டியல் பெறப்பட்டு, பட்டியல்படி பொருட்கள் இருப்புப் பதிவேட்டிற்கு கொண்டுவரப்படுகிறது. தெரு விளக்கு பழுதான சூழ்நிலையில், தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்கள் மூலம் பொருட்கள் வழங்கி, சரி செய்யப்பட்டு, தெரு விளக்கு பராமரிப்பு பதிவேடு மற்றும் மின்கம்பங்களின் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. தெருவிளக்கு இருப்புப் பதிவேட்டில் பொருட்கள் பெறாமல், பெறப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மின் கம்பங்களின் பதிவேடு மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பதிவேடு ஆகியவற்றில் பெறப்பட்ட பொருட்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. பொருட்கள் பெறாமல் சிறிது சிறிதாக வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்றுமுறை ரூ. 9,000 முதல் 10,000குள் காசோலை வழங்கப்பட்டுள்ளது. இதனால் பேரூராட்சிக்கு பல இலட்சம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள முறைகேடுகள் குறித்து விசாரணை மேற்கொண்டு இதுபோன்ற முறைகேடுகள் நடைபெறாமல் தடுத்திட உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோரை **11.11.2021** அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு, இம்முறைமன்ற நடுவ **03.11.2021** நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. மேற்கண்ட இருவரும் **11.11.2021** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

3. மனுதாரர் திரு. எஸ். கண்ணன் **11.11.2021** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியால் தெரு விளக்குகளை பொருத்துவதற்கு டெண்டர் கோரப்பட்டது. முறையாக டெண்டர் விடாமல் ஒரே குடும்பத்தில் உள்ள கணவன் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவர் மட்டுமே கலந்துகொண்டு மேற்கண்ட டெண்டரை எடுத்துள்ளனர். மேற்கண்ட ஒப்பந்தம் தொடர்பான விவரங்கள் எந்த நாளிதழிலோ அல்லது இணையதளத்திலோ இடம்பெறவில்லை. தெரு விளக்குகளை வாங்குவதற்கு குறிப்பிடப்பட்ட தொகையைவிட அதிகமாக பேரூராட்சியால் வாங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான வருமானவரி மற்றும் GST ஆகியவையும் ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படவில்லை. இதனால், பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமான பேரூராட்சி அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் **11.11.2021** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "மனுதாரர் திரு. சு. கண்ணன் என்பவர் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி குறித்த புகார் மனுவில் கூறியுள்ள புகார்மனு தொடர்பான விளக்கத்தினை எனது **9.11.2021** நாளிட்ட கடிதம் மற்றும் அதன் இணைப்புகளில் விரிவாக அளித்துள்ளேன் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள **9.11.2021** நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் புகார்கள் மீது, இனம் வாரியாக கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்:

(i) 2020-2021 மற்றும் 2021-2022 ஆண்டுகளுக்கான வருடாந்திர சப்ளைக்கான டெண்டர் விளம்பரம் நாளிதழில் வெளியிடப்பட்டு, மாவட்ட ஒப்பந்த மலரில் வெளியிடப்பட்டு, அலுவலக விளம்பர பலகையில் வெளியிடப்பட்டு, முந்தைய சப்ளைதாரர்களுக்கு தபால் அனுப்பப்பட்டு, முறைப்படி டெண்டர் பெறப்பட்டு, குறைந்த விலைப்புள்ளிக்கு **2020–2021**ம் ஆண்டிற்கு மன்ற தீர்மானம் எண்.**393/25.02.2021** மூலமும்,

2021–2022ம் ஆண்டிற்கு தீர்மானம் எண்.500/24.2.2021 மூலமும், மன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2020–2021ம் ஆண்டின் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் 15.2.2020 நாளிட்ட தினத்தந்தி நாளிதழிலும், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலர் எண்.13 நாள் 13.2.2020லும் வெளியிடப்பட்டுள்ளது. 2021–2022ம் ஆண்டின் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் 7.2.2021 தேதிய ஜுனியர் குரல் நாளிதழிலும், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலர் எண்.20 நாள் 11.02.2021லும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஒப்பந்த விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுள்ளன என்று மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதோடு, 2020–2021 மற்றும் 2021–2022 ஆண்டுக்களுக்கான வருடாந்திர சப்ளைக்கான டெண்டர் விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிதழ், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலர் நகல்களையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

(ii) ஒரே சிப்பத்தில் ரூ.10,00,000/–க்கு மேல் வேலை மதிப்பு இருந்தால் மட்டுமே வலைதளத்தில் (E.Tender) விளம்பரம் செய்யப்படும். 2020–2021ஆம் ஆண்டின் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் 15.2.2020 நாளிட்ட தினத்தந்தி நாளிதழிலும், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலர் எண்.13 நாள் 13.2.2020லும் வெளியிடப்பட்டுள்ளது. 2021–2022ம் ஆண்டின் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் 07.2.2021 நாளிட்ட ஜுனியர் குரல் நாளிதழிலும், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலர் எண்.20 நாள் 11.02.2021லும் வெளியிடப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளதோடு, 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டுக்கான வருடாந்திர சப்ளைக்கான டெண்டர் விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிதழ், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி மலர் ஆகியவற்றின் நகல்களை மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

(iii) 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்திர சப்ளைக்கான டெண்டர் விளம்பரம் நாளிதழில் வெளியிட்டப்பட்டு, அலுவலக விளம்பர பலகையில் வெளியிடப்பட்டு, முந்தைய சப்ளைதாரர்களுக்கு தபால் அனுப்பப்பட்டு, முறைப்படி டெண்டர் கோரப்பட்டுள்ளது. இதில் ஒப்பந்த விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுள்ளன. தெருவிளக்கு பராமரிப்பு உதிரி பொருட்கள் சப்ளை வருடாந்திர டெண்டரில் ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின், புதிய எண்.113 பழைய எண்.25A கீழ ரதவீதி, திருநெல்வேலி டவுன், ஜிஎஸ்டி எண்.33ABVPJ3962EIZH. PAN No.ABVPJ3962E, தொலைபேசி எண்.0462–2333681, 9843133681 என்ற நிறுவனமும், மாலானி லைட்டிங் கோ, 111, கீழ ரதவீதி, திருநெல்வேலி டவுன், ஜி.எஸ்.டி எண்.33AHCPV3268JIZ2, PAN No.AHCPV3268J. தொலைபேசி எண்.0462–2322227, 9786655544, என்ற நிறுவனமும் கலந்து கொண்டன. இரு நிறுவனங்களுக்கும் தொடர்பு கொள்ள வெவ்வேறு அலைபேசி எண்களே உள்ளன. ஒரு வருடத்தில் எவ்வளவு பொருட்கள் கொள்முதல் செய்யப்படும் என அறுதியிட்டு கணிக்கமுடியாத நிலையில், ஒப்பந்தப்புள்ளி நமூனா படிவத்தின் விலை ரூ.680/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

(iv) மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட பட்டியல்கள் அனைத்திற்கும், ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் நிறுவனம் மூலம் GST மற்றும்

வருமான வரி செலுத்தப்பட்டு வருகிறதெனவும், GST செலுத்தப்பட்டதற்கான ஆவண நகல்களையும் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

(v) 2020–2021ஆம் ஆண்டில் ரூ.6,49,745/–க்கும், 2021–2022ஆம் ஆண்டில் ரூ.3,00,378/–க்கும் மட்டுமே தெருவிளக்கு பராமரிப்பு உதிரி பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன. மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி 34 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள 15 வார்டுகளைக் கொண்ட பேரூராட்சியாகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இப்பேரூராட்சியின் மக்கள்தொகை 11,112 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 11,700 ஆகும். இப்பேரூராட்சியில் 676 தெருமின்விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி தெரு மின்விளக்குகளை சீராக ஒளிரச் செய்யும்பொருட்டு, தேவையான தெருமின்விளக்கு பராமரிப்பு உதிரி பொருட்கள் மட்டுமே வாங்கப்பட்டுள்ளன. அனைத்து பட்டியல்களுக்குமான GST சப்ளைதாரரால் செலுத்தப்பட்டுள்ளதற்கான விவரங்களை மூலைக்கரைபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

(vi) மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்குத் தேவையான பொருட்கள் வாங்கப்பட்டு, அவற்றிற்கு மட்டுமே பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. தெருவிளக்கு பராமரிப்பிற்கு வாங்கப்படும் உதிரிப் பொருட்கள், தெருவிளக்கு பராமரிப்புச் சாமான்கள், இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் நிதியிழப்பு ஏதுமில்லை. மின் உதிரி பாகங்கள் சப்ளை செய்ய பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்களின் மன்ற தீர்மானம் பெறப்படுவதில் காலதாமதம் ஆவதால், அவசர அவசியம் கருதி மாதத்திற்கு ஓரிரு பட்டியல்கள் மூலம் தெருவிளக்கு உதிரி பொருட்கள் தேவையின் அடிப்படையில் வாங்கி பயன்படுத்தப்படுகிறது. பின்னர் செலவினத்திற்கு உரிய மன்ற அனுமதி பெறப்படுகிறது. இதில் எவ்வித மோசடியோ, நிதியிழப்போ இல்லை.

6. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், வாக்குமூலத்தின்படி அவர் அளித்துள்ள 09.11.2021 நாளிட்ட விளக்க அறிக்கை, அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், சான்றுகள், விளம்பரங்கள், GST மற்றும் IT செலுத்தப்பட்டதற்கான ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- அரசாணை எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1.4.2008ன்படி ரூ.20 இலட்சம் வரை நிர்வாக அனுமதி வழங்கிட பேரூராட்சி உதவி இயக்குநருக்கும், தொழில்நுட்ப அனுமதி வழங்கிட உதவி செயற் பொறியாளருக்கும் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டுகளுக்கு டெண்டர் விளம்புகை செய்திட பேரூராட்சி உதவி இயக்குநரிடம் அனுமதி பெறப்படவில்லை என்று மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார். மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் உதவி இயக்குநரின் அனுமதி

பெறப்பட்டதா இல்லையா என்பதை தெளிவுபடுத்தவில்லை. மேலும், பேரூராட்சி உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கான செயல்முறை ஆணையின் நகல் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவில்லை.

- 2020–2021ஆம் ஆண்டிற்கு மன்றத் தீர்மானம் எண்.393/25.02.2021ன் மூலமும், 2021–2022ஆம் ஆண்டிற்கு மன்றத் தீர்மானம் எண்.500/24.02.2021 மூலமும் மன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் முதல் புகாருக்கு விளக்கமளித்துள்ளார். ஆனால் மேற்கண்ட இரு தீர்மானங்களும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட பின்னர், குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரித்து பெறப்பட்ட தீர்மானங்களேயன்றி, ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு முன்னர் பெறப்பட்ட மன்றத் தீர்மானங்கள் அல்ல. மனுதாரரின் 6வது புகார் குறித்து மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்கத்தில் மின் உதிரி பாகங்கள் சப்ளை செய்ய பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மன்றத் தீர்மானம் பெறுவதில் காலதாமதம் ஆவதால், அவசர அவசியம் கருதி மாதத்திற்கு ஓரிரு பட்டியல்கள் மூலம் தெருவிளக்கு உதிரிப் பொருட்கள் தேவையின் அடிப்படையில் வாங்கி பயன்படுத்தப்படுகிறது என்றும், பின்னர் செலவினத்திற்கு உரிய மன்ற அனுமதி பெறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கூற்று ஒப்பந்த விதிமுறைகள் முறையாக கடைபிடிக்கப்படாததை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாது, ஏற்கக்கூடியதும் அல்ல.

- 2020–2021 மற்றும் 2021–2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்திர சப்ளைக்கான விளம்பரம் நாளிதழ்/மாவட்ட ஒப்பந்த மலர்/அலுவலக விளம்பரப் பலகை மற்றும் முந்தைய சப்ளைதாரர்களுக்கு தபால் மூலமும் அனுப்பப்பட்டு, முறைப்படி டெண்டர் பெறப்பட்டதாக செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், பேரூராட்சியின் முந்தைய சப்ளைதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான எவ்வித ஆவண நகலினையும் இம்முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கவில்லை
- ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின் அடிப்படையில், மிகச் சொற்பமான ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்துள்ளது அறியப்படுகிறது. இதற்கான காரணங்கள் எதுவும் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் முன்வைக்கப்படவில்லை.
- 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்போது, ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (Tender value) எந்தவொரு பணிக்குமே இறுதி செய்யப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளி மதிப்பு உறுதிசெய்யப்படாமல், ஒப்பந்தம் கோரியுள்ளது ஒப்பந்த விதிமுறைகளை மீறிய செயலாகும். மேலும், 2020–21 மற்றும் 2021–2022 ஆகிய இரு ஆண்டுகளுக்குமே ஒப்பந்தப்புள்ளி மதிப்பு உறுதிசெய்து, விளம்பரத்தில் இடம்பெறாத நிலையில், ஒப்பந்தப்புள்ளி நமூனா (Tender documents price) தொகை ரூ.680/– (ரூபாய் அறநூற்று எண்பது மட்டும்) என முடிவுசெய்யப்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளதும் முறையற்றதாகும். மேலும், ஒப்பந்த மதிப்புத் தொகை விளம்பரத்தில் இடம்பெறாத போது, முன்வைப்புத் தொகைகள்

ஒவ்வொரு பணிக்கும் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிட்டுள்ளதும் விதிகளை முறையாக பின்பற்றப்படாததையே எடுத்துக்காட்டுகின்றன. எனவே, இந்நேர்வில் ஒப்பந்த விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படவில்லை என்பது ஊர்ஜிதமாகிறதென்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

- மேலும், ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.10 லட்சத்திலிருந்து 20 லட்சம் வரை உள்ள நிகழ்வுகளில், ஒப்பந்தபுள்ளி விற்பனை (Sale price of Tender Documents) ரூ.6,000/– + ST @ 4% + SC என மனுதாரர் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதோடு, இதனால் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட செயல் அலுவலர் காரணமாக இருந்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதற்கு மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் தெளிவான விளக்கத்தினை அளிக்காததோடு, ஒப்பந்த நமூனாவின் விலை நிர்ணயம் எதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பதையும் தெளிவுபடுத்தவில்லை.
- ஒரு வருடத்தில் எவ்வளவு பொருட்கள் கொள்முதல் செய்யப்படும் என அறுதியிட்டு கணிக்க முடியாத நிலையில், ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை ரூ.680/–ஆக வசூலிக்கப்பட்டதாக மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளது ஏற்க இயலாத கூற்று. மேலும், இது ஒப்பந்த விதிமுறைகளுக்கு முரணானதாகும். பேரூராட்சியின் மக்கள் தொகை, வார்டுகளின் எண்ணிக்கை, மின் கம்பங்கள் மற்றும் விளக்குகள் ஆகிய அனைத்தும் ஊர்ஜிதமாக குறிப்பிடப்படும்போது, வருடாந்திர தேவையை உறுதி செய்திட இயலாது என்று தெரிவித்திருப்பது ஏற்கக்கூடியதாக இல்லை.

- மேற்கூறிய நிலைப்பாட்டை ஏற்பதாக இருப்பினும், முறையாக நிர்வாக அனுமதி ஏதும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடமிருந்து ஒப்பந்தம் கோருவதற்கு முன்னர் பெறப்படாத நிலையில், செயல் அலுவலர் தன்னிச்சையாக முடிவினை மேற்கொண்டு, ஒப்பந்தங்களை இறுதி செய்வதற்கு மட்டும் மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளதால், தேவைக்கு மேல் கொள்முதல் செய்யப்படும் உதிரி பாகங்கள் உபயோகமற்று வீணாவதற்கும், தேவையில்லாமல் சிற்சில இடங்களில் உபயோகிக்கப்பட்டதாக பதிவுகள் மேற்கொள்வதற்கும்கூட வழிவகுக்கக்கூடுமென்பதால், பேரூராட்சிகளில் கொள்முதல் மேற்கொள்ளப்படுவதில் சீரான ஒழுங்குமுறை/நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டியவற்றை பேரூராட்சிகளின் ஆணையாளர் குறித்துரைத்து, உரிய அறிவுறுத்தங்களை அனைத்து பேரூராட்சிகளுக்கும் அனுப்பிவைக்க அறிவுறுத்தப்படுகிறது.
- ஒரே குடும்ப உறுப்பினர்களை கலந்துகொள்ள செய்து அதிக விலைக்கு பொருட்கள் கொள்முதல் செய்ய டெண்டர் விடப்பட்டதாக மனுதாரரால் கூறப்பட்டுள்ள கூற்று, செயல் அலுவலர் அளித்துள்ள விளக்கத்தின்படி, மனுதாரரின் புகாரில் ஆதாரமில்லை என்பது தெளிவாகிறது. இருவேறு நிறுவனங்களும் வெவ்வேறான முகவரிகளிலும், வெவ்வேறு பதிவு எண்கள்/PAN எண்களிலும்/தொலைபேசி எண்களிலும் உள்ளதால், ஒரே குடும்ப உறுப்பினர்களாக கருதுவதற்கு இடமில்லை.

* மூலைக்கரைப்பட்டி பேரூராட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட பட்டியல்கள் அனைத்திற்கும் ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் நிறுவனம் மூலம் GST மற்றும் வருமானவரி செலுத்தப்பட்டு வருவதாகவும், அதற்கான ஆதார ஆவணங்களை மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் வழங்கியுள்ள போதிலும், பேரூராட்சியால் ரூ.2.50 லட்சத்திற்கு மேல் வேலை/கொள்முதல் நிகழ்வில் 2% GST மற்றும் 1% வருமானவரி பிடித்தம் செய்யப்படவேண்டுமென்று மனுதாரரால் குறிப்பிடப்பட்டு, பேரூராட்சி நிர்வாகம் அதனை பிடித்தம் செய்யவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், பேரூராட்சி நிர்வாகத்தினால் கொள்முதல் செய்யப்பட்ட பட்டியல்களுக்கு வழங்கப்பட்ட தொகைகளில் பேரூராட்சி நிர்வாகம் GST மற்றும் வருமானவரி பிடித்தம் மேற்கொண்டமைக்கு மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் முறையாக விளக்கமளிக்கவில்லை. மேலும், மேற்கண்ட பிடித்தங்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் எதனையும் சமர்ப்பிக்கவும் இல்லை.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஓராண்டுக்கு தோராயமாக எவ்வளவு செலவு ஏற்படும் என்பதைக் கணக்கிட்டு உதவி இயக்குநரிடம் நிர்வாக அனுமதியும், மன்ற அனுமதியும் பெற்றிருக்க வேண்டும். இதைச் செய்யவில்லை. மன்றத் தீர்மானம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும் என்று கூறும் விளக்கம் நகைப்பிற்குரியது. கோப்பினை அனுப்பி உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதியும், மன்றத் தீர்மானமும் பெற்றிருக்கவேண்டும். இந்த விடுபாடு நேர்மையானதன்று. ஏறக்குறைய ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் உள் நோக்கம் இருப்பது உறுதியாகிறது. பேரூராட்சியால் GST மற்றும் TDS பிடித்தம் செய்யப்படவில்லை என்பதும் ஆவணங்கள் மூலம் தெரிகிறது. எனவே, முறையாக ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றாமல் 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தங்களை இறுதிசெய்து கொள்முதல்களை மேற்கொண்டுள்ள செயலுக்கு பொறுப்பான மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது, உரிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

**2021**ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் **23** –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. சு. கண்ணன், த/பெ சுப்பையா,
30A. எடுப்பல் கக்கன் தெரு, மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி–**627 354**

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (கவரில் பெயரிட்டு)
செயல் அலுவலர்,
மூலைக்கரைப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்–627 354
நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

23/1/21

செயலாளர்

23/1/21